உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௦.] சித்திரபானு-ஷூ தை மீ [பகுதி-௩.

Vol. 40. January–February 1943. No. 3.

உள்ளுறை.

பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான் மு. இராகவையங்காரவர்கள் ௫௫-௭௨

தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வரன்முறை:— ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள் ௭௩-௮௦

பண்டைத்தமிழர்:—சுவாமி ஞானப்பிரகாசரவர்கள் ௮௧—௯௦

அநுதாபக்குறிப்பு:—பத்திராசிரியர் ௯௧

மதிப்புரை:— ௯௨

திருமுருகாற்றுப்படை முன்னுரை:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L. XVII—XXIV

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1943.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | *ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | | | |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி—௪௰.] சித்திரபானு-௵ தை ௴ [பகுதி—௩.

Vol. 40. January–February 1943. No. 3.


## பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி*


[ராவ்ஸாஹிப். வித்வான். ஸ்ரீ. மு. ராகவையங்காரவர்கள்.]


'தென்னாடு முத்துடைத்து' என்றார் தெய்வப்புலவரான ஒளவையார். புறச்செல்வமான இம்முத்தோடு அகச்செல்வமான முத்தமிழும் தந்து முழுவளமும் பெற்றது அத்திருநாடு என்றார், கவிச்சக்கரவர்த்தியான கம்பர். எனவே, முத்துநாடு என்றும் முத்தமிழ்நாடென்றும் புகழ்பெற்றது பாண்டிமண்டலம் என்பதாயிற்று. இவ் இருபெருஞ்செல்வங்களையுங் கொண்டு, சிப்பி போன்ற ஏனைத் தமிழ்நாடுகளின் இடையில் அமைந்தமையாற் போலும், இந்நாட்டுவேந்தரைச் சேர பாண்டிய சோழர் என்று நடுநாயகமாக வைத்தனர் முன்னோர்.

பாண்டியரது பழைமையும் பெருமையும் அளவிடமுடியாதவை. 'தென்னவன் தொல்லிசை நட்ட குடி' என்றார் சான்றோர். இவரது தொல்லிசை, புராண இதிகாசங்களிலும் சிறப்பிக்கப்பட்டுளது. உலகப்பிரளயத்துக்குமுன்பு, கிருதமாலை என்ற வைகை நதிக்கரையில் இருந்தவனும், ராஜருஷியுமான சத்தியவிரதன்

* திருச்சி 'அகில இந்திய ரேடியோ' மூலம் 5—2—43-ல் ஒலிபரப்பப்பட்ட இவ்வுபந்யாசம், அநுமதியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

என்ற பாண்டியனே பின் வைவசுவதமனு ஆயினன் என்று கூறும் மத்ஸ்யபுராணம். இந்திரத்துய்மன் என்ற பாண்டியன் கஜேந்திரனாய் முதலைவாயிலிருந்து திருமாலால் காக்கப்பட்டவன் என்று பாகவத முதலியன உரைக்கின்றன. இதிகாசங்களான இராமாயண பாரதங்களும் இப்பாண்டியரைப்பற்றியும், இவர் தலைநகரமான கபாடபுரத்தைப்பற்றியும் புகழுகின்றன. இத்தகைய பழைமை பற்றியே, 'படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவருங் குடியினர்' என்று தமிழ்மூவேந்தரையும் கூறுவாராயினர் பரிமேலழகரும். இவ்வாறே,

> 'பூதம்பணி கொண்டாய்கடல் பாதந்தொழ நின்றாய்
> புயலைத்தளை யிட்டாய்கயல் பொற்குன்று பொறித்தாய்
> மூதண்ட புரேசன்கதிர் முடிசிந்த எறிந்தாய்
> மூரிச்சிலை வேளாண்மை முடிக்குந்திற மரிதோ'

என்று இவரது பழஞ்சரிதங்களாகக் கூறப்பட்டவை பலவாம். இவையெல்லாம் காலங்கடந்த பாண்டியர் வரலாறுகள். இவரன்றிச் சங்ககாலத்தவராய்ச் சரித்திரவுண்மைக்குரியவரான பாண்டியர்கள் அநேகர் உண்டு. இவர்களின் முன்னோனொருவனே இப்போது நான் கூறப்புகும் வேந்தன். இவன் பெயர்,

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

என்பது. இவனை நமக்கு முதன்முதல் அறிவித்தநூல், புறநானூறு என்ற சங்க இலக்கியமாகும். அந்நூலின் தொடக்கத்திற் குறிக்கப்பட்ட பாண்டியர்வரிசையிலே முதலில் நிற்பவன்—'கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி' என்பவன். இவனுக்குப்பின், இம்முதுகுடுமியே அடுத்தடுத்துச் சிறப்பிக்கப்படுகின்றான். இவ்வாறே, சோழர்வரிசையில், தந்தையும் மகனுமான இளஞ்சேட்சென்னியையும் கரிகாலனையும் முதலிருவராகப் புறநானூறு முறைப்படுத்தியுள்ளது. இதனை நோக்கும்போது இம்முதுகுடுமியின் தந்தையோ அடுத்த முன்னோனோ ஆனவன் மேற்கூறிய கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதி என்று நாம் கருத இடமுண்டாகின்றது.

இப்பாண்டியமுன்னோனது நீண்ட பெயரிலே, பல்யாகசாலை என்பதனால் யாகங்கள் பலவற்றை இவன் புரிந்தவன் என்பதும், முதுகுடுமி என்பதனால் அந்த யாகதீக்ஷைக்குரிய மயிர்முடியை நெடிது வளர்த்திருந்தவன் என்பதும் அறியலாம். முதுகுடுமி என்பதற்கு நீள வளர்த்த சிகை என்பது பொருள். பழைமையான கிரீடத்தையுடையவன் எனினும் ஆம். குடுமி - கிரீடம், மணிமுடி (தொல்). இவனைப் பல்சாலை முதுகுடுமி,பல்யாக முதுகுடுமி,குடுமிக் கோமான், குடுமி என்றும் கூறுவர்.

தமிழ்நாட்டு மூவேந்தர்களும் நால்வகைவருணங்களிலே, க்ஷத்திரியர் என்ற அரசர்மரபினர் ஆவர். இது, தொல்காப்பிய முதலியமுன்னூல்களால்நன்கறிந்தது. அந்தணர்க்கு அறுதொழில் கூறப்படுவதுபோல, அரசவருணத்தவர்க்கு ஓதல், வேட்டல் ஈதல், படைக்கலம்பயிறல், பல்லுயிரோம்பல் என்று ஐவகைத்தொழில் களை அத்தொல்காப்பியமும் அர்த்தசாஸ்திரங்களும் கூறுகின்றன. இவற்றுள் வேட்டல் என்ற யாகச்செயலைத் தமிழ்மூவேந்தர்களும் பரம்பரையாகவே நடத்திவந்தவர்கள். 'வேள்வியிற் கடவுள் 'அருத்தினை' என்று பெருஞ்சேரலிரும்பொறை என்ற சேரன் புகழப்படுகின்றான். இராசசூயம் வேட்டவன் என்று பெருநற் கிள்ளி என்ற சோழனொருவன் விசேடிக்கப்படுகின்றான். இம்முறை யில், பாண்டியனான இவனும், பல யாகங்களைப் புரிந்ததால் பெரும் புகழ் பெற்றனன். யாகப்புகழ் பாண்டியர்க்குத் தொன்றுதொட் டே உள்ளது. இவ்வரசரில் ஒருவன் அசுவமேதயாகஞ்செய்து முடித்து நின்றபோது, அகஸ்தியமுனிவர் அவனிடம்வந்து, அவனை ஆசீர்வதித்ததாக மகாகவி காளிதாசரும் இரகுவமிசத்திற் கூறுதல் அறியத்தக்கது.

இம்முதுகுடுமியின் காலத்தவராய் இவனால் பரிசுபெற்ற புல வர்கள் மூவர். இவருள், காரிகிழார் என்பவர் ஒருபாட்டும், நெட் டிமையார் என்பவர் மூன்றும், நெடும்பல்லியத்தனார் என்பவர் ஒன்றும் ஆக மூவரும் இவனுக்கு அணிந்த பஞ்சாத்தினங்கள்

புறநானூற்றில் ஒளிர்கின்றன. இப்புலவர்கள்வாக்கிலிருந்து, தன் காலத்தில் ஒப்புயர்வற்ற வீரனும் வள்ளலுமாக விளங்கியவன் இவ் வேந்தன் என்பது தெரியலாகும். இவற்றோடு உறுதிப்பொருள்களை உயர்ந்த முறையிற் கைப்பற்றியவனாகவும், தெய்வபக்தியும் வைதிக சிரத்தையும் மிக்கவனாகவும், அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் உடையவனாகவும் வாழ்ந்தான்.

'உன்னோடு எதிர்த்துவந்து தோற்றுப்போய் வசைபெற்ற பகையரசர் பலரோ? யூபஸ்தம்பங்களை நட்டு, 'பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்'கும்படி நீ முடித்த யாகங்கள் பலவோ? இவற்றுள் எவை பலவாயின?' என்று வினவுகின்றார் ஒரு புலவர். இதனால், அறக்களவேள்விகளும் மறக்களவேள்விகளும் புரிந்து புகழ்பெற்றவன் இம் முதுகுடுமி என்பதும், 'பல்யாகசாலை' என்ற விசேஷணத்தின் காரணமும் நன்கு விளங்கும். இவனது அறச்செயல்கள் எவ்வளவு கருணையும் இன்பமும் கலந்திருந்தனவோ, அவ்வளவாகக் கொடுமையும் துன்பமும் கொண்டிருந்தன இவன் மறச்செயல்கள்.

'தேர்குழித்த தெருக்களிலே, வெள்ளிய வாயையுடைய கழுதைநிரைகளைப் பூட்டியுழுது பாழ்படுத்தினை, பகைவரது சிரிய அரண்களை; அவரது புகழ்மிக்க விளைவயல்களை, குதிரைகளின் குளம்புகள் மிதித்து உழக்கும்படி, உன் தேர்ப்படைகளை ஓட்டி அழித்தனை; அவரது காவலமைந்த ஊருணிகளை, உன் களிறுகளைக்கொண்டு கலக்கிச் சேறாக்கினை' என்று இவ்வாறு பாடுகின்றார் நெட்டிமையார். பகையரண்களை அழித்துக் கழுதையேர்கொண்டு உழுது வெள்ளைவரகும் கொள்ளும் வித்திப் பாழ்படுத்துவது பழைய போர்முறைகளில் ஒன்று. 2100-ஆண்டுகட்குமுன் வாழ்ந்த கலிங்கவேந்தனை காரவேலனும் இச்செயல்புரிந்தவன் என்று அவனது அத்திகும்பசாஸனம் கூறும். இக்காலத்தில் நிகழும் பகைவரது போர்க்கொடுமைகளை நினைக்கும்போது மேற்கூறிய செயல்கள் அதிசயம் தரக்கூடியனவோ? வன்கண்மைகளை இவ்வாறு கையாளநேர்ந்த இடத்திலும் அறநெறிகளை அன்போடு கடைப்பிடித்தவன் இம் முதுகுடுமி. பகைக்கோட்டைகளை முற்றுகையிடுமுன்பு

'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்'

என்று எச்சரிக்கைசெய்துவந்தவன் இவனென்றும், போரிலே பகைவரிடமிருந்து கவர்ந்த பொன்களையும் புரவி களிறுகளையும், இயலிசைகளாற் போர்க்களம்பாடும் புலவர்க்கும் பாணர்களுக்கும் வாரிவழங்கினன் என்றும் வருணித்துப் பாடினர் அந்நெட்டிமையார். மற்றொருவரான காரிகிழார் என்ற புலவர்,

'சிவபிரான் திருக்கோயிலின்முன்பு, அதனை வலம்வருவதற்கு, உன் வெண்கொற்றக்குடை தாழ்வதாக; நான்மறையாளர் உன்னை ஆசீர்வதிக்க எடுத்த கைகளின்முன்பே உன்சிரம் வணங்குவதாக; பகைவர்நாடுகளைச் சுட்டெரிப்பதில் உண்டான பலமணங்கலந்த புகையால், உன் முடிமாலை வாடுவதாக; உன் தேவியரின் ஒளிபொருந்திய முகங்களின்முன்பு, நீ கொண்ட சீற்றம் ஆறுவதாக'

என்று கூறுவது இன்பமூட்டுகின்றது. இதனில், வீட்டுநெறியும் அறம் பொருள் இன்ப நெறிகளும் ஆகப் புருஷார்த்தங்கள் நான்கும் முறையே கூறப்பட்டுள்ள அழகைக் காணலாம். இப்பாண்டியன் முக்கட்செல்வனான சிவபிரானிடம் பத்திமிக்கவன் என்பதும் இப்புலவர்வாக்கால் தெரிகின்றது.

48-வருஷங்கட்குமுன்பு, புறநானூறு ஐயரவர்களால் முதன்முதல் வெளிவந்தபோது, அதனிற் கண்ட "சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை" என்பது போன்ற நீண்ட அரசர்பெயர்களும் மக்கள்பெயர்களும், நமக்கு அதிசயமாகவே தோற்றின. இப்படியும் பெயர்வழக்குண்டோ? உண்மையில் இவர்கள் இருந்தவர்தாமா? என்ற ஐயங்களும் அப்போது எழுந்தன. இவ்வையங்கள் யாவும் நீங்கும்படியான கருவியொன்று அரசாங்கத்துச் சாஸன இலாகாவிலிருந்து சிலஆண்டுகட்குமுன் கிடைத்தது. இதுவே, 'வேள்விக்குடிச்சாஸனம்' என்பது. வட்டெழுத்தில், வடமொழியிலும் தென்மொழியிலும்

அமைந்த இத் தாமிரப்பட்டயம், கிடைத்துள்ள தமிழ் மூவேந்தர் சாஸனங்களுள்ளே பழைமைவாய்ந்ததாகும். கி. பி. 767-ல் பட்டம்பெற்றவனாகக் கருதப்படும் பராந்தகன் - நெடுஞ்சடையன் என்ற பாண்டியனால் அமைக்கப்பட்ட இச்சாஸனத்தின் தமிழ்ப் பகுதியானது, ஏனாதி சாத்தஞ்சாத்தன் என்பவரால் சொற்சீரடியிற் பாடப்பட்டுள்ளது. இது கூறுஞ் செய்தியாவது:—

'கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவிர்த்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதிராஜன்'

என்பவன் கொற்கைகிழான் காமக்காணி நற்கொற்றன் என்ற பிராமணன் நடத்திவந்த வேள்வியைப் பூர்த்திசெய்விக்கவேண்டி, மதுரைப்பக்கத்துப் பாகனூர்க்கூற்றத்துள்ள வேள்விகுடி என்ற கிராமத்தை, வேள்விச்சாலைமுன்பு நின்றுகொண்டு அந்தணாளர் யாவரும் அறியக்கூறி உதகபூர்வமாகத் தானம்பண்ணினான். அது அவன் வழியினரால் நெடுங்காலமாக அனுபவிக்கப்பட்டுவந்தது. பின்பு களப்பிரன் என்ற கொடுங்கோலரசன் ஒருவன் படையெடுத்துவந்து பாண்டிநாட்டைக் கைப்பற்றியகாலத்தில், அந்த தானகிராமம் அவனால் பறித்துக்கொள்ளப்பட்டது. பின், கடுங்கோன் என்ற பெருவீரனை பாண்டியன் தோன்றினான். அவன் அக்களப்பிரனை வென்றோட்டி, இழந்த நாட்டை மீண்டும் பெற்றனன். அவனிலிருந்து ஐந்தாந்தலைமுறையில் உதித்தவன், பராந்தகன் நெடுஞ்சடையன் என்றபாண்டியன். இவன் ஆட்சிதொடங்கிய மூன்றும் ஆண்டிலே, வேள்விகுடியை ஆதித்தானம்பெற்றவனது வமிசத்தவனான காமக்காணி நற்சிங்கன் என்பவன் மதுரைமாநகர் வந்து அவ்வரசன் திருமுன்பு முறையிட்டவனாய், முற்காலத்தில், முதுகுடுமியால் தன்முன்னோன் வேள்விகுடித்தானம் பெற்றதையும், பின், கொடுங்கோலரசன் ஆட்சியில் அதனைத் தன்வமிசத்தவர் இழக்கநேர்ந்ததையும் கூறி, திரும்பத் தனக்கு அதனை அளிக்கும்படி பிரலாபித்துக் கேட்கலாயினன். இதுகேட்ட வேந்தன், நன்றுநன்றென முறுவலித்தவனாய்ப் 'பழைமையாக அக்கிராமம் உனக்குரியதுதான் என்பதைப் பிரமாணபூர்வமாகக் காட்டுக'

என்று கூறினான். அதற்கு உடன்பட்ட அம்மறையவன், தனக்குள்ள உரிமையை ஆதாரங்களுடன் அரசற்கு விளக்கியவளவில், உண்மையறிந்து மகிழ்ந்த பாண்டியன், அந்த நற்சிங்கனுக்கு அவ் வேள்விகுடியை நீர்வார்த்துத் தானமளித்தான்: என்பதே அவ்வரலாறு. இவ்வேள்விகுடி மதுரைப்பக்கத்துள்ள விளாங்குடி என்ற ஊர்போலும். இவ் வுயர்ந்த சாஸனம் நெடுஞ்சடையனது புகழ்களையும், அவனுக்கு முன்பு ஆண்ட அரசர்பெருமைகளையும், மற்றும் பல சரித்திரநிகழ்ச்சிகளையும் விளக்குகின்றது. இவை யாவும், தமிழ் நாட்டிற் கிடைத்துள்ள வேறு பழைய சாஸனங்களுடன் பெரிதும் ஒற்றுமைகொண்டு, உண்மைவரலாறுகள் ஆகின்றன. முதுகுடுமியின் வீரம் நியாயம் தியாகங்களைப் புறநானூற்றோடு ஒத்து இச் சாஸனமும் பாடுதல் அறியத்தக்கது. யாகங்கள் பலவற்றைத் தான் புரிந்ததுமட்டுமன்றித் தக்கோரைக்கொண்டு புரிவித்தும்வந்தவன் இவன் என்பது இவ்வேள்விகுடித் தானத்திலிருந்து விளக்கமாகும்.

இம் முதுகுடுமியை அடுத்துப் புறநானூறு முறைப்படுத்திக் கூறும் பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பான். எனவே, இச்செழியன் அம்முதுகுடுமியை அடுத்து ஆண்டவன் என்று கருதக்கூடியதே. இவனை மதுரைக்காஞ்சியாற் பாடிய மாங்குடிமருதனார்,

'பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட'வன்

என்று புகழ்கின்றார். இதனால், அச்செழியனுக்கும் இம்முதுகுடுமிக்கும் இருந்த நெருங்கிய தொடர்பும், இவன் வேள்வித்துறையிற் பேர்பெற்றிருந்த செய்தியும் வெளியாகின்றன.

வேள்விகுடித் தானபட்டயத்திலிருந்து, முதுகுடுமியின் காலமும் ஒருபடியாக அறிய இடமுண்டு. இவனால் அளிக்கப்பட்ட தானகிராமத்தை, 8-ஆம் நூற்றாண்டில், இவன்வமிசத்துப் பாண்டியன்

புதுப்பித் தளித்தான்—எனவே, அவ்விருவர்க்குமிருந்த இடைக் காலத்தை எவ்வளவு அதிகமாகக் கூட்டினாலும், 500 ஆண்டுகட்கும் மேற்போகாது எனலாம். எனவே, மூன்றாம்நூற்றாண்டை இம் முதுகுடுமிக்குரியதாகக் கருதல் தகும். இப்பாண்டியனை மேற்கூறிய நெட்டிமையார்—

'எங்கோ வாழிய குடுமி தங்கோ
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'

என்று வாழ்த்துகின்றார். இதனால், பஃறுளி என்றநதி இவன்காலத்தில் இருந்ததென்றும், பழைய பாண்டியனொருவனால் அஃது உண்டாக்கப்பட்டது என்றும் தெரியவருகின்றன. இந்த நதி குமரியாற்றோடு கடல்கொள்ளப்பட்டதென்று கூறுவர் இளங்கோவடிகள். ஆனால், தென்பாண்டியின் கோடியில் உள்ள ஆய்நாட்டில் பறளியாறு என்ற நதியொன்று உண்டு. இது, திருவாங்கூர்ச் சாஸனத்தாலும் இப்போதை வழக்காலும் அறிந்தது. பறளி என்பது, பஃறுளி என்பதன் திரிபே. பலதுளி பெருவெள்ளமாய் ஓடும் காட்டாறுகள் சிலவும் இப்பெயர்பெற்றுள்ளன. தென்திருவாங்கூர்ச்சீமையில் உள்ள இப் பறளி என்ற பஃறுளியே நெட்டிமையார் கூறியதாயின், பழைய கடல்கோளால் இந்த நதியின் கடலோரத்து முனைப்பகுதியே அழிபட்டதாகவேண்டும். இவ்வாறு, சரித்திரப்பிரசித்தனான சங்ககாலத்துப் பாண்டியமுன்னோன் ஒருவனது வரலாறுகள் சுருக்கமாகத் தெரியவருகின்றன.

௳

# தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வரன்முறை

சுவாமி விபுலாநந்தர்

'பிரபுத்தபாரத' 1941 நவம்பர்மாத வெளியீட்டில் 'ஆசிரியர் கருத்துரை'யாக யான் எழுதிய (Religious Revival in Medieval India' என்னும்) பொருளுரையினைத் தமிழன்பர்கள்பொருட்டு ஈண்டு மொழிபெயர்த்துத் தருகின்றேன்.

வேதஇருடிகள் அறிவுநெறிநின்று மேலான உண்மைப்பொருளைக் காணமுயன்றார்கள். உபநிடதகாலத்து அறிஞரும் வாதராயணரென்னும் பெரியாரும் போற்றிவளர்த்த வைதிகஞானநெறியானது சங்கரரது அத்வைதஞானமாக நிறைவுபெற்றது. ஆதலினாலே, சங்கரர் பழைய இந்தியாவில் வைதிகத் தொன்னெறி நிறுவிய பெரியோர்வரிசையிலே இறுதியில் நிற்றற்குரியர். இராமாநுஜர் (கி. பி. 1027-1137) ஒரு புதிய யுகத்தினைத் தொடங்குகிறார். தமிழரது அறிவுச்செல்வம் இராமாநுஜருக்கு முதுசொத்தாகக் கிடைத்த வரன்முறையினைத் தமிழ்நாட்டிற்குப் புறத்தேயுள்ளோர் அதிகம் அறியார். சடகோபர் எனப் பெயரிய நம்மாழ்வார் ஞானக் கடலினுள்ளே முழுகித் தமிழ்மொழிக்கு அணியாகத் திரட்டி வைத்த அருமணிக்களஞ்சியம் இராமாநுஜருக்கு உரிமைப்பொருளாயிற்று. திருநெறித்தொண்டர் பலரைத் தோற்றுவித்த செழுமைமிக்க தமிழ்க்குடியானது பாவலர்க்குப் பாவலராகவும், நுண்ணறிவினருள் நுண்ணறிவினராகவும், தொண்டர்பரவும் தொண்டராகவும் விளங்கிய சடகோபரை உலகிற்கு அளித்தது. அவரது திருவாய்மொழி தமிழ்க்கவிச்செல்வத்திற்குத் தலையணியாயிற்று. 'வாய்மை'யென்பது 'உண்மை' ஆதலின், 'வாய்மை+மொழி' என நின்ற 'வாய்மொழி' 'உண்மையுரை' என்னும் பொருளினது.

அவ்வுண்மையும் தருக்கமுறையினற் பெறப்படும் சிற்றுண்மை யாகாது, ஞானயோகநெறியினல் எய்துதற்குரிய பேருண்மையா கும். பரிபாடல் முதலிய சங்கத்தமிழ்நூல்களிலே 'வாய்மொழி' வேத நூலுக்குப் பெயராக வழங்கப்பட்டது. 'திரு' என்பது 'செம்மை,' 'நன்மை'யினைக் குறிக்கும் அடைமொழியாகும். செம்மைநலம் வாய்ந்த தமிழ்ச்சொற்களினலே மேலான உண்மையறிவினை யுணர்த்தும் திருவாய்மொழியானது தென்னாட்டு வைணவப்பெரியா ரால் வேதநூலுக்கு ஒப்பாக மதிக்கப்பட்டது. கோயில்களிலும் கழகங்களிலும் அதனை நெறிமுறையிலே ஓதவேண்டுமென இரா மாநுஜர் ஏற்பாடுசெய்துள்ளார். பதின்மூன்றும் பதினன்காம் நூற்றாண்டிலே வாழ்ந்த வேதாந்ததேசிகர் திருவாய்மொழியினைத் திரமிடோபநிடதம் எனப் பெயரிட்டுப் போற்றுவாராயினர். திருவிருத் தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி என்னும் நூல்களும் நம்மாழ்வா ரால் ஆக்கப்பெற்றன.

ஆழ்வாருள் ஒருவராகிய மதுரகவி என்னும் பெரியார் வட நாட்டிலே யாத்திரைசெய்வாராய்க் கங்கைக்கரையிலேநிற்கும் எல்லையிலே, தெற்குத்திசையிலே ஒரு பேரொளிவிளக்கத்தினைக் கண்டு இறும்பூதெய்தித் தெற்குநோக்கிச்செல்வாராயினர். முன் ஞளிலே பலஸ்தீனநாட்டு பெத்லகேம் நகரிலே ஒருதெய்வக்குழந் தை பிறந்தபோது கீழ்த்திசையிலே ஒரு விண்மீன் தோற்றக்கண்டு அதனைப் பின்தொடர்ந்துசென்ற ஞானவான்களைப்போலத் தென் திசையிலேதோன்றிய பேரொளிவிளக்கத்தினை நாடிச் சென்ற மதுரகவியார் ஆழ்வார்திருநகரியெனப் பின்னளிலே பெயர்பெற்ற திருக்குருகூரை அடைந்தார். ஆங்குப் பரந்த கொம்புகளையுடைய திருப்புளியின்கீழே யோகநிலையில் வீற்றிருந்த பதினறுட்டைப் பிராயத்து இளைஞரொருவரைக் கண்டார். யோகங்கலைந்து விழித்த இளைஞர் முதியோராகிய மதுரகவியாரது வினக்களுக்கு விடை யிறுத்தார். மதுரகவியார் மனமகிழ்வெய்தி ஆண்டிலிளைய அப் பெரியாருக்கு மாணவராயினர். சடகோபர் வேளாண்குலத்தவர்.

வேளாண்குலம் வங்கநாட்டுக் காயஸ்தகுலத்தினை ஒத்த தாத்தது. சடகோபரது தந்தையார் திருக்குருகூருக்குத் தலைமைதாங்கிய காரிமாறர்; தாயார் உடையநங்கையார். இவர் தமது தவப்பயனாக உதித்த சடகோபர் பிறந்தநாள் சாக்கியகுலத்தோன்றலாய்ப் புத்ததேவரெனவிளங்கிய சித்தார்த்தகுமாரர் உலகிலே தோன்றிய நாளாகிய வைகாசித்திங்கள் நிறைமதிநாளாகும். சடகோபர் உதித்த ஆண்டு இதுவென்பது இன்னும் வரையறையாக அறியப் பட்டிலதெனினும் அதனை ஐந்தாம்நூற்றாண்டின் பிற்பகுதியில் உளதெனக் கொள்ளலாம். நம்மாழ்வார் திருவாய்மலர்ந்த அருட் பாடல்களை மதுரகவியார் ஏட்டிற் பொறித்துவைத்தார். அவை தம்மை உலகிற்பரப்பிய பெருமை நாதமுனிகளுக்கு உரியது. நாத முனிகள் (கி. பி. 824–924) வேதம், மிருதி முதலிய கலைகளில் வல்ல யோகி. தற்செயலாகத் திருவாய்மொழிப்பாடல்கள் சில இவர் செவியில் வீழ்ந்தன. அன்பு கசிந்த அவ்வின்னிசைப்பாடல்களி னாலே ஆண்டவனைத் தொழுதல் யோகத்தினும் சிறந்தசெயலென நாதமுனிகளது உள்ளத்திற்குப் பட்டது. அன்புநெறி இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்களின்வழியாகப் பாரதநாட்டிற்குவந்ததென எண் ணுங் கலைவல்லார் திருவாய்மொழி, தேவார, திருவாசகச் செழும் பாடல்களைச் செவிமடுப்பார்களாயின் அன்புநெறி தமிழ்நாட்டிலே தோன்றியதென அறிந்துகொள்வர்.

இஸ்லாமிய சமயகுரவராகிய முகம்மதுநபி அராபிநாட்டிலே தோன்றிய காலத்திலே, தமிழ்நாட்டில்வாழ்ந்த திருநாவுக்கரசர் (கி. பி. 574–655, சீகாழிப்பதியிலே தோன்றிய இளஞாயிறாகிய திருஞானசம்பந்தர் (கி. பி. 639–655), கொல்லம் ஆண்டினைத் தொடங்கிய கேரளமன்னராகிய சேரமான்பெருமாளுக்கு ஆசிரிய ரும் நண்பருமாகிய சுந்தரமூர்த்திகள் (கி. பி. 807–825), மந்திரித் தொழிலை நீத்துத் துறவுபூண்ட மாணிக்கவாசகர் (இவர்காலம் பத்தாம்நூற்றாண்டாயிருக்கலாம்) என்னும் நால்வரும் அன்பு

கலந்த ஞானப்பாடல்களை உலகிற்கு நல்கினார்கள். இவர்களது செவ்விய வாழ்க்கையினாலும் செழும்பாடல்களினாலும் ஏற்பட்ட எழுச்சியின்பயனாகச் சோழமன்னர்கள் பதினோராம் பன்னிரண்டாம்நூற்றாண்டுகளிலே பல தேசங்களைத் தங்கள்கைப்படுத்தி ஆழிவேந்தர்களாக விளங்கினார்கள். தமிழ்நாட்டு அழகுச்செல்வத்திற்கு அறிகுறியாகிய திருக்கோயில்கள் நாடெங்கும் திகழ்ந்தன. கி. பி. மூன்றாம்நூற்றாண்டுமுதல் ஆறாம்நூற்றாண்டுவரையுமுள்ள காலத்திலே தமிழ்நாட்டு வரன்முறையிலே ஒரு வெற்றிடம் காணப்படுகிறது. மூன்றாம்நூற்றாண்டின் இடைக்காலத்திலே பல்லவ மன்னர்கள் காஞ்சியிலே அரசுபுரிந்தார்கள். வடநாட்டிலே குப்த குலத்து ஆழிவேந்தர் அரசுபுரிந்தனர். சேர சோழ பாண்டிய குலங்கள் அரவுதீண்டிய பரிதிமதியத்தைப்போல ஒளியிழந்திருந்தன. இப்பழங்குடிகள் புத்துயிர்பெற்று எழுந்தது ஏழாம்நூற்றாண்டின் நடுவில் என்னலாம். கி. பி. 641-ஆம் ஆண்டிலே பல்லவமன்னனாகிய நரசிங்கவர்மன் வாதாபிப் போர்க்களத்திலே இரண்டாம் புலிகேசி யென்னும் சளுக்கியமன்னனை வென்று வாகைமாலை சூடினான். இச்சளுக்கியமன்னனாகிய புலிகேசி வடநாட்டுக் கன்னியாகுப்ஜத்து முடிமன்னனாகிய ஹர்ஷமன்னனைப் புறமுதுகிடச்செய்த வீரன். ஹர்ஷனது அவைக்களத்தினைப் புகழ்ந்து சீனதேசயாத்திரிகராகிய ஹ்யுன்சாங் எழுதியிருக்கிறார். ஹர்ஷனை வென்ற வீரனாகிய புலிகேசியைப் போர்க்களத்திலே வென்றபெருமை பல்லவப் படைகளின் சேனைத்தலைவராகிய சிறுத்தொண்டருக்குரியது. சிறுத்தொண்டர் சீகாழிப்பிள்ளையாருக்கு நண்பர்; பிள்ளையாரது அருண்மொழியமிழ்தினையுண்டு உடல்வலியும் மனவலியும் பெற்றவர். ஒளியிழந்த பவுத்த சமண மதங்கள் மக்களது மனத்தினைக் கலக்கிச் செயலின்மையிற் புகுத்தியகாலத்திலே நாயன்மாரும் ஆழ்வார்களும் தோன்றித் தமிழ்மக்களுக்கு எல்லா உடைமைகளிலும் மிக்க 'உள்ளமுடைமை' என்னும் ஊக்கத்தினை நல்கி நாடு நலமடையும்வழிகளிலே செலுத்தினார்கள். சம்பந்தரும் சுந்தரரும்

ஆண்டில் இளையாராயினும் செயற்கருஞ் செயல்களைச் செய்து முடித்த பெரியாராவார். மன்னர்களோடு நட்புரிமையுடையாராய் இவ்விருவரும் செய்த 'அரசியற்கிளர்ச்சி'யும் அதனால் எய்திய பயனும் பதினான்காம் நூற்றாண்டுவரையும் நாட்டிற்கு ஆக்கமளித்தன. ஆண்டவனது திருவடிக்கன்பர் அவனது அருள்வலியினாலே உடல்வலியும், மனவலியும் எய்திச் செயற்கருஞ்செயல்களைச் செய்வார்களென்னும் உண்மையானது ஆழ்வார் நாயன்மாரது வரலாற்றாலே தமிழ்நாடு எய்திய சிறப்பினை நோக்குமிடத்துத் தெளிவாகப் புலப்படுகிறது. ஆழ்வார் நாயன்மாருக்குப்பின் சைவ வைணவ ஆசாரியர்கள் தோன்றி அருண்மொழிகளைக் கோவைப்படுத்தியும், குருநிலையங்களை ஏற்படுத்தியும் தொண்டாற்றினர். அங்ஙனமாயினும் முன்னோராகிய பெரியோர் உலகிற்கு அளித்த தெய்வீக விடுதலையினைப் பின்னோர் அறிந்தும் அறியாமலும் எல்லைப்படுத்தினர். அதனை ஓர் எடுத்துக்காட்டினாலே சிறிது விளக்குவாம்.

*　　　*　　　*

தம்மை ஆண்டவனுக்கு மக்களாகவும், உற்ற நண்பராகவும், தொண்டராகவும், உடன் உழைப்பவராகவும் கருதிய மூதறிஞர் வகுப்புவேற்றுமைகாட்டாது 'எல்லோரும் ஓர்குலம்' என்னும் உண்மையினைக் கடைப்பிடித்து வாழ்ந்துவந்தனர். அவரது சீரிய ஒழுக்கமும் தெய்விகச்செயலும் நம் உள்ளத்தை உருக்குந்நீர்மைய. திருஞானசம்பந்தப்பிள்ளையார் கவுணியகுலத்தில் உதித்து வேத வேள்விகளைப் போற்றியவரெனினும் பாணராகிய திருநீலகண்டரையும் அவருடைய மனைவியாராகிய விறலியாரையும் தமது நட்புக்கு உரியாராக்கித் திருக்கோயில்களுக்கு உடனழைத்துச்சென்றனர். பிள்ளையார் பாடிய இசைத்தமிழ்த் தேவாரப்பதிகங்களைப் பாணரும் பாடினியாரும் இசையிலமைத்து அன்பருள்ளத்தை இன்புறுத்தினர். திருநீலநக்கநாயனாரது திருமனைக்குச்சென்றஞான்று, பிள்ளையார் அந்தணராகிய நீலநக்கரைநோக்கிப் பாணர்க்கும்

பாடினியார்க்கும் உள்மனையிலே இருக்கையமைத்துத்தரும்படி திருவாய்மலர்ந்தருளினர். நீலநக்கர் பெறற்கரும் விருந்தினராகிய பாணர்தலைவரது குலநலமாராயாது, பிள்ளையாரது திருவுள்ளக் கருத்திலும் ஒருபடி உயரவொழுகுவாராய் வேள்வித்தீயிருந்தமிகத் தூயமனைக்கட்டினகத்துப் பாணர்க்கும் பாடினியார்க்கும் இருக்கை யளித்தார். தீக்கடவுள் தொண்டர்செயலினைப் பாராட்டியதற் கறிகுறியாகத் தீ வலஞ்சுழித்து எழுந்தது. ஆண்டில் இளையராய் அறிவில் முதியரான பிள்ளையார் ஆண்டிலும் அறிவிலும் முதிய ரான திருநாவுக்கரசரை 'அப்பரே' என அழைத்தார். அன்பு கனிந்த இவ்வுரிமைச்சொல் தவமுதியாரது திருநாமங்களுள் ஒன்றாக இன்றுவரையும் நிலைபெற்றது. நம்மாழ்வாரைப்போல அப்பரும் வேளாண்குலத்தில் உதித்தவர். ஆண்டவன் திருவடிநீழலை அடை யும்பொழுது அப்பருக்கு வயது எண்பத்தொன்று. சம்பந்தப் பிள்ளையார் நிலவுலகில்வாழ்ந்தது ஈரெட்டாண்டு எல்லையாகும். எழுபதாண்டின்மிக்க முதியவரும் ஏழாண்டுப்பாலகரும் முதன்முத லிலே ஒருவரையொருவர் கண்ட காட்சி படிப்போர்சிந்தையை யுருக்குந்நீர்மையது. அந்தணர்குலத்தவராகிய அப்பூதியடிகள் வேளாண்குலத்தவராகிய அப்பரை வழிபடுகடவுளாகச் சிந்தையுள் வைத்துப் பெறற்கரும்பேற்றினை யடைந்தார். அந்தணராகிய மதுரகவியார் வேதந்தமிழ்செய்த மாறனாகிய நம்மாழ்வாரையன்றி வேறு தெய்வத்தை அறியேனென அழகிய செழும் பாடல் பத்தி னால் நமக்கு அறிவுறுத்துகின்றார். பாணர்குலத்திலுதித்த திருப்பா ணாழ்வார் அந்தணமுனிவர்தோளிலிவர்ந்து திருமுன்னிலைக்குவர வேண்டுமென்பது திருவரங்கத்தம்மானது திருவுள்ளக்கருத் தாயிற்று. சுந்தரமூர்த்திநாயனாருடைய நண்பராகிய சேரமான் பெருமாள் திருநீற்றுப்பொலிவினைக்கண்டு வண்ணான்முன்னிலை யிலே தலைவணங்கினர். இத்தகைய உளப்பாங்கு பெரியோருக்கு அண்மையான காலத்திலிருந்த ஆசாரியரிடத்தும் அமைந்திருந்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே சகலாகமபண்டிதராக விளங்கிய

அருணந்திசிவாசாரியர் வேளாண்குலத்து மெய்கண்டதேவரைத் தமக்குக் குருவாகக்கொண்டார். அம்மரபில் நான்காங்குரவராகிய உமாபதிசிவாசாரியர் தம் உறவினரால் ஒதுக்குண்டு தில்லை நகர்ப்புறத்திலே கொற்றவன்குடியில் வதிந்தார். இவர் பெற்றான் சாம்பானுக்குப் 'பேதமறத் தீக்கைசெய்து' உண்மைஞானத்தை உணர்த்தினார். இராமாநுஜரது சீரிய உளப்பாங்கினை உலகம் நன்கு அறியும். தாம் நரகம்புகினும், உலகம் உய்தல்வேண்டும் என்னும் கருத்தினோடு கோபுரத்தின்மீதுநின்று மறைமொழியை அனைவர்க்கும் உணர்த்தினார். இவரது அருட்கடைக்கண்ணோக்கினாலே தீண்டாதாரும் பிறரும் உயர்வெய்தினர். இவரது போதனைகள் வடநாட்டிற் பரவியபோது அங்குள்ள பெரியாரும் சாதிக்கட்டுப் பாட்டினைத் தகர்த்தெறிந்து சமயவுண்மைகளை அனைவர்க்கும் உரிமையாக்கினர்.

* * *

நாயன்மாரதுசெல்வாக்குத் தென்னாட்டோடு நின்றுவிட்டது. வடக்கே காசுமீரம், நேபாளம், திபேத்து நாடுகளிலே சைவம் முன்பே நிலைத்திருந்தது. மெய்கண்டதேவருக்கு உண்மையுணர்த்திய பரஞ்சோதிமுனிவர் திபேத்துநாட்டிலுள்ள திருக்கைலாய மலையினின்றும் தென்னாட்டுக்குச் சென்றதாகக் கூறுவர். வடநாட்டிலெழுந்த பாசுபத, காபாலிக, மாவிரத சைவநெறிகள் நாயன்மார்காலத்திலே தமிழ்நாட்டில் நிலைபெற்றிருந்தன. அக்காலத்திற்கு முற்பட்டகாலத்திலே தமிழ்நாட்டில் வாழ்ந்தவராகக்கருதப்படும் திருமூலநாதர் நாதயோகிகள்கூட்டத்து முதற்குரவராக இருக்கலாம். இவரும் வடநாட்டிலிருந்து தெற்கே சென்றவர். சைவாகமங்கள் இருபத்தெட்டு என்னுந் தொகையினவாக வடமொழியில் உள்ளன. ஆலய அமைப்பு வழிபாட்டுமுறை யென்னும் இவற்றை விரித்துக்கூறும் ஆகமங்களுட் சில கௌடதேசத்துப் பிராமணரைக் குறிப்பிடுகின்றன. சோழமன்னர்கள் அளித்த சாசனங்கள் சிலவற்றிலும் கௌடப்பிராமணர் குறிப்பிடப்பட்டனர்.

இவ்வாறு நோக்கும்போது தென்னாட்டுச் சைவம் வடநாட்டினை நாடிநின்றதென்னும் உண்மை வெளியாகின்றது. நாயன்மாரது அருண்மொழிகள் ஒருபுறமாக வடநாட்டு வைதிக தாந்திரிகக் கொள்கைகள் மற்றொருபுறமாகநின்று தென்னாட்டுச் சைவத்தை வளர்த்தன. தென்னாட்டு வைணவமோவென்றால் ஆழ்வார்களாகிய ஊற்றினின்று உதித்து அன்புவெள்ளம்பெருக்கி வடக்குநோக்கி அலையெறிந்துபாய்ந்து பாரதநாடுமுழுவதும் பரவியது. முன்னாளிலே பகீரதர் என்னும் பெரியார் கங்கையாகிய வானதியினைப் பூவுலகிற்குக் கொணர்ந்தாரெனப் புராணங் கூறும். இராமாநுஜமுனியாகிய பகீரதர் தென்னாட்டுத் தெய்வக் காவிரிவெள்ளத்தினை வடநாட்டுக் கங்கையிலே கலக்குமாறுசெய்தார். இத்தகைய கலப்புக்கங்கைநதி யூற்றெடுக்கும் திருமலைக்கும் சென்றுசேரும் கடலுக்கும் இடையே கிடந்த பலவிடங்களிலும் நிகழ்ந்தது. கலப்பினால் ஏற்பட்ட அன்புவெள்ளம் பாரதநாட்டின் மேற்குத்திசையிலும் பரவியது. மும்மையும் செம்மைவாய்ந்த இப்பாரதநாட்டிலே அரியின்திருநாமம் ஆயிரமும் யாங்கணும் முழங்குவவாயின.

*                    *                    *

# பண்டைத்தமிழர்

(நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசர்)

உகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி

## II தமிழரின் முன்னைய இருப்பிடக்கோள்கைகள்

இன்றைக்குத் தென்னிந்தியாவைத் தங்கள் முக்கிய உறைவிடமாகக்கொள்ளுகின்ற தமிழர் எட்டினுக்கெட்டாத பண்டை நாட்களிற் பூமியின் பிற்பாகங்களிலிருந்து வந்து இங்குக் குடியேறியவர்கள் என்பது தற்காலத்துச் சிறந்த ஆராய்ச்சியாளர் பல்லோரது முடிபு. மிகப் பிற்பட்டகாலத் தமிழ்நூல்களில்,

> "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ்கூறு நல்லுலகம்"

என்றதுபோன்ற கூற்றுக்கள் ஒன்றையொன்று தழுவியவைகளாய்க் கேட்கப்படுதலைக்கொண்டு, பண்டுதொட்டுத் தென்னிந்தியாவே தமிழரது தாயகமாம் என முடித்தல் அமையாது. எங்ஙனமெனில், தமிழ்நூல்கள்கூறும் எல்லைகள் ஆரியர் வடநாட்டைப் பற்றிக்கொண்டபின்னே ஏற்பட்டவைகள் என்பது மலையிலக்கு. நமதுகைக்கெட்டியிருக்கும் தமிழ்நூல்களெல்லாம், பெரும்பாலும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்படாதவைகளாய்க் கிடத்தலால், இவை பிற்காலத்துத் தமிழகத்தின் எல்லையைமட்டும் வரையறுத்துக்கூறத்தக்கன. இவற்றில் தமிழர் ஓர்காலம் வேறோரிடத்தில் வதிந்தவர்கள் என்ற [1]குறிப்புக் காணப்படாமையைக்கொண்டு,

---

[1] பண்டிதர் சவரிராயரின்கருத்துப்படி "தமிழ்ச்சாதியாரெல்லாம் இன்றைக்கும் தங்கள் பூர்வவாசஸ்தலத்தைப்பற்றிய ஒரு ஐதிகத்தைக் காப்பாற்றிவந்திருக்கின்றனர். பழங்காலத்து இந்தியர்களின் பாரம்பரியம் புராணங்களில் வரைந்துவைத்தபடி இளாவிருதமே அவர்கள் முன்னோரது சுயநாடு எனக் காணலாம். இளாவிருதம் என்பது மலைப்பிரதேசமான ஒரு நகர். அது கல்தேயதேசத்திலுள்ள இலாம் அல்லது ஈலம் எனும் பண்டைக்கால நாகரிகம்பெற்ற நாட்டைக் குறிக்கும். புராணங்கள்கூறு

சாம், அன்னோர் என்றும் தென்னிந்தியாவிலே வாழ்ந்தனர் என நிச்சயித்தல்கூடாது. பிறநாடுகளை, அவற்றிலுள்ள மிருகாதிகளை, தட்பவெப்ப நிலைகளைச்சுட்டும்சொற்கள் இக்காலத்தமிழிற் காணப் படவில்லையே என்றதை முன்னிட்டு நியாயம்முடித்தலும் ஒவ்வாது. நமக்கு ஓர் ஐயாயிரம்ஆண்டுகளுக்கு முற்பட்டதும் ஒரு தமிழ் நூலிலேனும் கல்வெட்டிலேனும் குறிக்கப்பட்டிராததுமான சிந்து வெளித் தமிழ்நாகரிகம் இன்றைக்கு அறியப்பட்டிருக்கின்றது. தமிழர் ஓர்காலம் இந்தியாமுழுதும் பரந்திருந்தார், சிந்துவெளியிற் சீர்திருத்தத்தின் கொடுமுடியை அடைந்திருந்தார் என்றதற்கு எந்தத் தமிழ்நூல் ஓர் மங்கலான எழிலாவது காட்டுகின்றது? ஐயாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட வரலாறுகளைப்பற்றிய ஒருகுறிப்பு மில்லாத இடைக்காலத் தமிழ்நூல்களில், நாம், அதற்குமுன்னும் பல்லாயிரஆண்டுப் பழமைகொண்டசெய்திகளைக் காண எதிர் பார்க்கலாமா?

1. லெமூரியாக்கோள்கை:—இக்கால இந்தியாவைச்சேர்ந்த தாய்த் தெற்கே ஆஸ்திரேலியாவோடும் மேற்கே ஆபிரிக்காவோடும் கிழக்கே மலாய்தீவுகளை அடக்கிச் சீனாவோடும் இணைந்ததாய்ப் பரந்திருந்த லெமூரியா எனும் பெரிய கண்டத்தில் தமிழர் பெருகியிருந்தார்களென்றும், அது இந்துசமுத்திரத்தில் மூழ்கிப் போவதன்முன்னரே அன்னோர் புறம்போந்து தென்னிந்தியாவைச் சேர்ந்துகொண்டார்களென்றும் ஏணெஸ்ற் ஹைக்கல் ஆதியோர் ஒருசிலர் ஊகித்ததுண்டு. இக்கொள்கைக்கு ஆதாரம் இல்லை.

---

கின்றபடி இளாவிருதம் மேரு அல்லது மலையிலுள்ளது. இந்த இளாவிருதம் எனும் மலைநகரே தேவர்களும் பதினெண்கணங்களாக வகுக்கப்பட்ட பிறரும் ஆதியில் குடிகொண்ட இடம் என அவைகள் அறைகின்றன. பதினெண்கணங்களும் தென்னிந்தியாவின் பதினெட்டுப்பிரிவான குடிகளையு மே குறிக்கின்றன எனத் தோன்றும்'' (The Tamilian Antiquary I,8-9) மேரு என ஸம்ஸ்கிருதத்தில்வரும் சொல்லும் மேடு மலை எனும் தமிழ்ச்சொற் களும் ஒரே உற்பத்தியை உடையன என்பது இங்குக் குறிக்கத்தகும். இந்தியபூர்வகுடிகள் தங்கள் ஆதிநாடு இலாம் எனக் காட்டுதல்போலப் பிராகுயிசாதியார், பலுக்கியர், பின்னியர், அக்கத்தியரும் காட்டுகின்றனர் என்பது பண்டிதர் சவரிராயரின் கருத்து.

தரைநூலோர் காட்டுகின்ற சில முடிபுகளைக்கொண்டுதான் இவ்வாறு ஊகிக்கலாம். மனிதன் பூமியில் தோன்றுமுன் நமது கோளம் பலபல மாற்றங்களை அடைந்துள்ளது என்பது நிச்சயம். எரிமலைக்குழப்பங்களின்பயனுய்ப் பூகோளத்தின் மேற்றோடு அங்கங்கே உள்ளடங்குவதாலும், கடற்பெருக்குக்களாலும் கடந்துபோன இலட்சக்கணக்கான ஆண்டுகளில் நிலப்பரப்பு நீர்ப்பரப்பாகவும் நீர்ப்பரப்பு நிலப்பரப்பாகவும் மாறிமாறிவந்தே தற்காலம் மனிதர் வாழத்தக்க கண்டங்களாய்த் திகழுகின்ற கட்டாந்தரை உண்டாயிற்று. இன்றைக்கும் சில சிறுதீவுகள் மறைவதும் கிளம்புவதும் உண்டு. மானிடர் தோன்றுமுன் கடற்பிராணிகளும் கரைப்பிராணிகளும் படிப்படியாகத் தோன்றின என்பது சரித்திரசித்தம். பூமியின் மேற்பரப்பில் பெரும்மாற்றங்கள் நிகழ்ந்து அது மானிட வாழ்க்கைக்கு ஏற்றதான பின்பு, ஈற்றில் மனிதன்—தோன்றினவனுன். கடையூழியிற்றோன்றிய மனிதன் தனக்குமுன் பூகோளமானது ஆயத்தமடைந்துகொண்டுவந்த ஊழிகளிலும் வாழ்ந்தானென்பது அசம்பாவிதமாகும். ஆகவே, லெமூரியா எனச் சிலர் பெயரிட்டுவழங்கும் பாகமெல்லாம் திடராயிருந்து பின் சமுத்திரத்தில் மூழ்கிப்போனமை தரைநூலோர் கூறும் ஆதிஊழிகளிலேயே ஆதலால், அதைக்கொண்டு முடிக்கும் நியாயம் பொருந்துமாறில்லை.

1934-ஆம் ஆண்டில் புரோபசர் காடினர் என்பவரை உள்ளிட்ட ஆங்கிலேய விஞ்ஞானசாத்திரிகள்குழாம் ஒன்று இந்துசமுத்திரத்தின் மேற்குப்பாகத்தில் கொண்டவனநாடு என்ற பழங்காலத் தரையைப்பற்றி ஒரு விஞ்ஞானமுறையான ஆராய்ச்சி நடத்திற்று. இவ்வாராய்ச்சியினுற் சில உண்மைகள் வெளிப்பட்டன. அந்த ஆராய்ச்சியாளர் லெமூரியாக்கண்டத்தைக் கண்டுகொண்டனரோ என்ற கேள்விக்கு புரோபசர் காடினர் கொடுத்த மறுமொழியாவது: "பசிபிக்சமுத்திரத்திலாதல் இந்துசமுத்திரத்திலாதல் முன்னுளில் மனிதன் வாழ்ந்த ஒரு கண்டம் இருந்ததாக எனக்குத் தோன்றவில்லை. நாங்கள் ஆராய்ந்தது கொண்டவனநாடு இருந்த இடத்தைப்பற்றியேயன்றி லெமூரியாவைப்பற்றியல்ல. கொண்டவனநாடு தரைநூலின் மிக முற்பட்ட பேரூழிகளில் இருந்தது. அது மனிதன் நமது பூகோளத்தில் தோன்றுமுன், ஊரும் பிராணிகளின்

காலத்தில் நீரில் மூழ்கிப்போய்விட்டது. லெமூரியா என [மனிதர்வாழ்ந்த] ஓர்கண்டம் இருந்ததாக நம்புவதற்கு எவ்வித ஏதுவையும் காணேன். பசிபிக்சமுத்திரத்தீவுகளில் கண்டங்கள் மூழ்கிப்போனதைப்பற்றிச் சொல்லப்படும் கட்டுக்கதைகள், எரிமலைத்தீவுகள் கடலில் அடிக்கடி தோன்றியும் மறைந்தும் போவதைக் கண்டதினலும் கேட்டதினலும் எழுந்திருக்கலாம். பெரிய தீவுகள் என்று சொல்லப்படத்தக்கவைகள் சில சென்றநூற்றாண்டிலும் மறைந்துபோயின" என்றார்.[1]

லெமூரியாக் கண்டத்தில் தமிழர் இருந்தனர் என்றகொள்கை, தரைநூலோர்காட்டும் முந்திய ஊழிகளின் நிலப்பரப்பெல்லாம் மனிதர் உறையத்தக்கன என்ற தப்பான எண்ணத்தால் எழுந்தது. இவ்வாறே, விந்தியமலைக்கு வடக்கிலும் இமயமலைக்குத் தெற்கிலும் உள்ள நிலப்பாகம் முன்னொருநாள் கடலாயிருந்தது என்பர் தரைநூலோர். இமயமலைதானும் பூர்வயுகங்களில் சமுத்திரத்திலிருந்து கிளப்பிவிடப்பட்டது என்பதற்கு அதன் சாரல்களிற் காணப்படும் நீர்வாழுயிர்களின் என்புக்கூடுகள் சான்று. இதைக்கொண்டு இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையில் நீர்நிலையம் இருந்த காலத்தில் அதற்கு வடக்கே ஆரியர் வசித்திருந்தார் என ஒரு நூலாசிரியர் கூறுகின்றார்[2]. இது பொருந்தாதகூற்றும். உயிர் வாழ்வன பல விளங்கியகாலத்திலும் மனிதன் பூமியில் தோன்றாதிருந்தான் என்ற உண்மையை மறந்துபோவோரே இன்ன இடத்தில் பூர்வம் ஒருகண்டம் இருந்தமையால் அக்கண்டத்தில் மனிதரும் வாழ்ந்தனர் என மயங்கிக்கூறுவர்.

இந்நிலவுலகில் மனிதசீவியம் எல்லையில்லாதகாலமாய் நடந்தது என்று எண்ணிக்கொள்ளுதலும் அம்மயக்கத்துக்குக் காரணமாகலாம். மனிதன் கோடாகோடி ஆண்டுகளாய் உலகில் வாழ்கின்றான் எனச் சிலர், உண்மைநிகழ்ச்சிகளின் ஆதாரமின்றி உரைப்பர். தாவரவருக்கங்கள், கிருமி கீடவருக்கங்கள், பட்சி மிருக வருக்கங்களின்பின்னே மனிதத்தோற்றம் உண்டாயிற்று என்பது விஞ்ஞானிகள் எல்லோர்க்கும் ஒத்த துணிபு. மனிதரைப் பழைய

---

[1] The Times of Ceylon 15th July 1934. [2] Rig Vedic India.

கற்காலத்தவர், புதிய கற்காலத்தவர், உலோககாலத்தவர் என மக்கள் நூலோர் உலகசிவியத்தைச் சார்ந்த சீர்திருத்தத்தின் படிகளைநோக்கி வகுப்பர். ஆதியிலிருந்த கற்காலமனிதர் புதை பொருட்களாய்க் காணப்படுகின்ற இடைக்காலத்துப்பெரியமிருகங்களின் ஊழிக்குரியவர்களேயன்றி அப்பாற்பட்டவர்களல்லர். ஜாவாவிலுள்ள சேர்வோ ஆற்றங்கரையில் 1894-ஆம் ஆண்டு கண்டெடுத்த மண்டையோடும் இருதொடையென்புகளும் இருகொடுப்புப்பற்களும் ஒருவகை மனிதனுடையவைகளே என்று சிலர் சொல்லப் பலர் அவைகள் மனிதனுடையவைகளல்ல என நிச்சயிக்கின்றனர். இவ்வாறே சீனுவிலுள்ள பீக்கிங்கரில் அகப்பட்ட என்புகளும் பிறவுமாம். குரங்கே மனிதனுயிற்று எனும் குழறுபடையான கொள்கையாளர்தாம் வானரம்போன்ற ஓர்விலங்கின் மீதிகளை மனித என்பாதிகள் எனக் காட்டிவிட மாய்ச்சறப்படுவர். மனிதன் ஆதிதொட்டு மனிதனேயன்றிக் குரங்குவருக்கத்திலிருந்து மாறினவனல்லன். "பாகற்கொட்டைபுதைக்கச் சுரைக்கொடி முளைக்குமா?" என்ற நாடோடி முதுமொழியில் அடங்கிய உண்மையை நோக்குக. அவ்வவ்விதை அவ்வவ்வருக்கத்தையே பிறப்பித்தல் படைப்பில் எங்கணுங்கண்ட முறை. குரங்குவிந்து குரங்கும் மனிதவிந்து மனிதனுமே என்றது முறைபிறழாத ஒரு இயற்கைநெறி. ஓரறிவுமுதலாய் மேலும்மேலும் அறிவுகூடிய உயிர்கள் உலகிற் படிப்படியாய்க் காணப்படுகின்றமையால் ஒரு கீழ்வருக்கத்தினின்று வேறொரு மேல்வருக்கம் உண்டாயிற்று எனத்துணிதல் ஒவ்வாது. ஒவ்வொருவருக்கத்தினுள்ளும் சிறிது மாற்றம் ஏற்படக்காண்கின்றோமன்றி ஒன்று மற்றொன்றாய்மாறுதலை யாண்டும் கண்டிலோம். இற்றைக்கு ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகளாய் எழுத்துச்சாசனங்களால் நாம் அறிந்த மிருகாதிகளும் மனிதரும் அந்த அந்தப் படியில் மாறாமல் இருக்கின்றனர். எழுத்துச்சாசனங்களால் அறியப்படாத புதைபொருள்களையும் பூவகசாத்திரத்தால் அறிகின்றோமே; அப் புதைபொருள்களுள்ளும் ஒன்று மற்றொன்றாக மாறியிருத்தலைக் காணோம். புதையுண்டு கல்லாய்ப்போன மிருகாதிகளின்மீதிகள் வெவ்வேறான முழுமுழுப்பிராணிகளாகவேயன்றி, அரைத்திட்டம் காற்றிட்டமாய், ஒன்று மற்றொன்றாக வளர்ந்துவருவனவாய்க் காணப்படுவனவல்ல. வருக்கம் மாறாமையே இயற்கையாம் எனும் சமநிலையான கொள்கையாளர்,

தனாநூலையும் மக்கள்நூலையும் மொழிநூலையும் ஒட்டி, மனிதன் காலம் அலகில்லாத பேரூழிகளிலல்ல, பல்லாயிரம் ஆண்டுகளின் முன்தான் உள்ளதென்பர். தடைப்படாத மனக்கற்பனையுள்ள (ஆகத்தலைகீழான) விஞ்ஞான சாஸ்திரிகளேயும் மனிதனின் காலம் இற்றைக்கு ஐம்பதினாயிர ஆண்டுகட்கு மேற்பட்டதல்ல என்பர். அன்னோருடைய கணக்கு மிதமிஞ்சியதென உணரும் பிறவிஞ்ஞானிகள் வேறுவேறு கணக்குப்பூட்டுவர். சிலர் அது பதினையாயிரம் என்பர் (Sollas); சிலர் பதினையாயிரத்துக்கும் இருபதினாயிரத்துக்கும் இடையில் என்பர் (Waldmeyer); சிலர் பதினாயிரம் என்பர் (Boulay); இன்னுஞ்சிலர் ஏழாயிரத்துக்கும் பிற்பட என்பர் (Holst). இவ்வாறு விஞ்ஞானிகளிடையிலுள்ள அபிப்பிராயபேதம் இவ்விஷயத்தில் எதையும் நிச்சயித்துக்கூறுதல் கூடாதெனக் காட்டுகின்றது. மனிதன் பூவுலகில் தோன்றி எவ்வளவு காலந்தானாயினும், அவன் அச்சுமாறுதிருத்தலோ திறம்பாத ஒரு உண்மையாம். மொழிநூலின்முடிபுகளைச்சுட்டிப் பின்னோர் இடத்திற் பேசுவோம்.

இதுகாறும் கூறியவற்றால் லெமூரியாவினின்று தமிழர் புறம்போந்தனர் எனும் ஊகத்திற்கு ஆதாரமில்லாமற்போகின்றது. லெமூரியா எனும் இப்பெயரும் லெமூரியாக் கண்டமனிதர் எனும் கொள்கையும் தங்குதற்கு ஒரேயொரு ஆதாரமாய் எடுத்தாளப்படுவது என்னவெனில், லெமூர் எனும் தேவாங்கு இன்றைக்கு ஆபிரிக்காவை அடுத்த மடகாஸ்கர் தீவிலும் இந்துசமுத்திரத்தின் தீவுகளிலும் உள்ளது ஆதலால், இந்நிலப்பரப்புக்களெல்லாம் ஒன்ருய் இணைக்கப்பட்டிருந்தகாலமும் ஒன்று உளதாதல்வேண்டும் என்பதுதான். ஆயின், இப்போது லெமூர் வேறிடங்களில் உயிர்வாழாவிடினும், அப்பிராணி உலகம் முழுதிலும் ஆங்காங்கே ஓர்காலம் இருந்ததைப் புதையுண்ட என்புக்கூடுகள் காட்டுகின்றன. லெமூர் பூகோளமெங்கும் ஓர்காலம் காணப்பட்டதாகவே, மேற்சொல்லிய நியாயத்தின்படி, ஓர்காலம் உலகம்முழுதும் நீர்நிலை இடைவிடாது ஒரே கண்டமாயிருந்தது என்னவும்வேண்டுமன்றோ? ஆதலால் அது ஒவ்வாது என்க.

லெமூரியா என மாந்தர்வாழ்ந்த ஒருகண்டம் இருந்ததில்லை எனினும், குமரிமுனைக்குத் தென்பாகத்தில் வெகுதூரநிலம் கடலால் அள்ளுண்டுபோன வரலாறு உண்மை நிகழ்ச்சியாகலாம். இது குமரிகண்டக்கோள்கை. ஆயின் குமரிகண்டம் எனச் சொல்லப்படும் இந்தியாவின் தென்கோடியிலுள்ள பாகம் கடலுள் மூழ்கியது தரைநூற் பேரூழிகளில் அல்ல, பிற்பட்டகாலத்தில் என்பது எல்லா நூலாசிரியர்களுக்கும் சம்மதம். அன்னோர் கருத்தின்படி, குமரிகண்டத்தைக் கடல்கொண்டது முடத்திருமாறன் எனும் பாண்டியன்காலத்திலாம்.[1] ஆதலால், அங்கு தமிழர்தாமே குடியிருந்தனர் எனக் கூறுதலும் இயையும். இக்கடல்கோளையே,

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

என்று தமிழ்ப்பழநூலொன்று விவரித்தது (கலித். 104, 1—4). அதற்கு விசேடவுரை "அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க்கூற்றமும் என்னும் இவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்" என்றிருத்தலால், கடல்கொண்டநாடு அத்துணைப் பெரும் பரப்பன்று எனவும் தோன்றும். பின்,

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

எனச் சிலப்பதிகாரம் வருணித்ததும், உரையாசிரியர் பின்னும் சில வருணனை கூட்டி, "தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் குமரியாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்பாலைநாடும், ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரைநாடும், ஏழ்குறும்பனைநாடு மென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல்கொண்டது" எனவுரைத்ததும், அக்காலத்து மலிந்திருந்த புராணகற்பனையின்போக்கைப் பின்பற்றிப்போலும்.

---

[1] தமிழ்வரலாறு பக். 31

இலங்கையின் இராசாவலிநூல் எடுத்துச்சொல்லும் வரலாறும் இக்கடல்கோளையே பாராட்டியுரைத்த கூற்றாகலாம். அது கூறுவது: "துவாபரயுகத்திலே இராவணனது துட்டத்தனத்தின்பயனாக அவன் கோட்டையையும் 25 மாளிகைகளையும் மன்னாருக்கும் தூத்துக்குடிக்கும் இடைப்பட்ட 400,000 வீதிகளையும் கடல் கொண்டது. இக்காலத்தில் கெலனித்தீசன் என்பவனின் துர் நடக்கை காரணமாக 100,000 துறைப்பட்டணங்களும் 970 மீன் பிடிகாரர் குப்பங்களும் முத்துக்குளிப்போரின் 470 குறிச்சிகளுமாக் இலங்கையின் பன்னிரண்டில் பதினொருபாகம் பெருங்கடலில் ஆழ்ந்தது. மன்னார் இந்த அழிவுக்குத் தப்பிக்கொண்டது. கரைத் துறைப்பட்டணங்களுள் கட்டுப்பிட்டியும் மாதம்பையும் காக்கப் பெற்றன" என்பது.

ஆகவே, லெமூரியா தமிழரது பிறப்பிடம் எனக்கொள்ளுதல் பொருந்தாததாகி, சரித்திரகாலத்திலே குமரிகண்டத்தில் தமிழர் வாழ்ந்திருந்தனர் என்றதுதான் மீந்திருக்கின்றது. ஆயின், அவர்கள் அங்குதான் உற்பத்தியாயினர் என்றதற்கு ஒருசான்றும் இல்லை. அன்னோரின் உண்மைப் பழம்பதியை ஆராயுமுன் வேறு சில ஒவ்வாக்கொள்கைகளையும் எடுத்துக்காட்டுவோம்.

2. ஸ்கீத்திய உற்பத்தி:—மத்திய ஆசியாவில் வாழ்ந்தோரும் துரானியவகுப்பைச் சேர்ந்தோருமான ஸ்கீத்தியர் இந்தியாவின் வடமேற்குக் கணவாய்களினூடு வந்திறங்கித் தமிழராயினர் என்பது பிஷப் கால்டுவலின் கொள்கை. இதற்கு ஆதாரமாய் அவர் காட்டுவது: ஸ்கீத்தியருடையமொழியும் தமிழ்மொழியும் ஆகிய இரண்டின் இலக்கணப்போக்குக்கும் இடையில்தோன்றும் சில ஒப்புமைகளாம். ஆயின் குலம் வேறு மொழி வேறு என்றதை இங்கு நாம் மனத்தில் தரித்துக்கொள்ளுதல்வேண்டும். ஒருகுலம் வேறொருகுலத்தின்பாஷையை முற்றாக மேற்கொண்டிருத்தலைச் சரித்திரவாயிலாய் ஆங்காங்கு அறிந்திருக்கின்றோம். வடஇந்தியாவிலே பல திராவிடகுலங்கள் ஆரியருடைய மொழியைத் தமது மொழியோடு கலந்து மேற்கொண்டமை உலகறிந்தது. இலங்கையின் மேற்குக்கரையோரங்களிலே இருக்கும் தமிழ்க்குலங்கள்

இன்று சிங்களம் பேசுகின்றன. ஒருகுலம் வேறொருகுலத்தின் பாஷையை முழுவதும் மேற்கொள்ளலும் காணப்படும். ஆகவே இருகுலங்கள்பேசும் பாஷையில் சில ஒப்புமைகள் இருத்தல் ஒன்றைக்கொண்டு அவை இரண்டும் ஒரு குலமாம் என முடித்தல் அமையாது. அவ்வொப்புமைகளோடு உடற்கூறு பழக்கவழக்கங்கள் சமயக்கொள்கைகள் முதலியவற்றிலும் ஒற்றுமையிருத்தல் இன்றியமையாதது. பின்னும் இருவகுப்பாரும் முன் ஓர் காலம் ஓரேயிடத்தில் வதிந்தமைக்குப் போதிய சரித்திரச் சான்றுகளும் வேண்டப்படும். இவைகளிலெல்லாம் ஸ்கீத்தியரும் தமிழரும் வேறுபடுகின்றனர் என்பது ஆன்ரேரின் ஆராய்ச்சியால் முடிந்த முடிபு. பர்சியாவிலுள்ள பகிஸ்தான் எனும் மலையிலே கி. மு. ஐந்தாம்நூற்றாண்டில் மூன்று பாஷைகளில் பொறித்துள்ள கல்வெட்டுக்களைக்கொண்டே பிஷப் கால்டுவல் ஸ்கீத்தியருடைய பழைய மொழிக்கும் தமிழுக்கும் இடையில் ஒற்றுமைகாட்டத் தேடினர். இவ்வொற்றுமைகளுட் பல தமிழுக்கு அப்பாஷையோடுமட்டுமல்ல, தமிழினத்தைச்சேராத வேறுமொழிகளோடும் இருத்தலால் அவர் எடுத்துக்காட்டும் நியாயம் பொருந்தாது. அன்றியும், ஸ்கீத்தியமொழிக்கும் தமிழுக்கும் வசனக்கட்டளவில் வெகுதூரவேற்றுமை இருக்கின்றமையும் கணிக்கத்தக்கது. ஸ்கீத்திய வகுப்பாருள் கியூனர் (அவுணர்) என்போர் சந்திரகுப்த விக்கிரமாதித்தியன்கால முதல் (கி. பி. 6-ம் நூற்றாண்டு) வடஇந்தியாவினுள் நுழைந்தமை சரித்திரசம்பவமாகும். அன்றி, தென்னாட்டில் வாழ்ந்த பண்டைத் தமிழர் எல்லாம் ஸ்கீத்தியரோ என்றதற்கு ஒரு சான்றும் இல்லை.

3. தமிழர் மங்கோலியாவிலிருந்து வடகிழக்குக் கணவாய்களினூடு வந்திறங்கிய மஞ்சள்நிறமக்களிலிருந்து உண்டானவர்கள் என்ற கொள்கைக்கும் ஆதாரவுகிடையாதிருக்கின்றது. இக்கொள்கை சீனபாஷையில் தமிழையொத்த சிலசொற்கள் இருக்கின்றமையை மட்டும் ஒரு ஏதுவாகக்கொண்டு ஸ்ரீ கனகசபைப்பிள்ளை தமது "1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்" எனும் நூலில் எடுத்துச் சொல்லிய வகைமாகும். சீனபாஷையிற்போல உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் தமிழ் அடிகள் காணப்படுகின்றமை இக்கால ஆராய்ச்சியாற் பெறப்படுகின்றது. இது தமிழ்மொழியின் பெரும்

பழமையை வலியுறுத்துமேயாயினும், இதனுல் அவ்வப்பாஷை யாளரெல்லாம் தமிழருக்கு மூதாதையர்கள் என்று முடிக்கவாராது. முன்சொல்லிய ஸ்கீத்தியரைப்போல் மங்கோலியரும் இடைக் காலத்தில் தமிழரோடு வந்து கலந்துகொண்டனர் என்பதுதான் உண்மையாகும். வடகிழக்கு இந்தியாவின் நாகர்கள் அம்மங்கோலிய ரிலிருந்து உண்டானவர்கள் என்ப.

4. ஆஸ்திரேலியப் பழங்குடிகளும் தமிழரும் ஒருசாதியார் என்ற கோள்கை:—இவர் இருசாராருடையவும் ஒற்றுமைக்குச் சிலர் எடுத்துக்காட்டும் ஏதுக்கள் எவையெனில், ஒன்று, ஆஸ்திரேலியப் பழமொழிக்கும் தமிழுக்கும் சிலசொற்களில் உள்ள பொதுமை யாம். இது போதிய சான்றல்ல என்பது முன்னர்த் தெரிவிக்கப் பட்டது. பூமெறங் எனும் வளைதடியை இருபாலாரும் வழங்கியது மற்றொன்று. இவ்வழக்கம் பிற்காலத்தில் ஓரிடத்திலிருந்து மற்ற இடத்திற்குப் போயிருக்கலாம். அல்லது இருபகுதியாரும் இயற்கை யறிவைக்கொண்டு அக்கருவியைக் கண்டுபிடித்திருக்கலாம். ஆதலால், இந்த ஏதுவும் பொருந்தாது. இருசனங்களுக்குமிடை யில் முகரேகையின் ஒற்றுமையையும் எடுத்துக்காட்டுவர். ஆயின் சேர் உவில்லியம் உறன்றர் என்பவர் செய்த ஆராய்ச்சியால் இந்த ஒற்றுமை மிகச் சிறியதாயிருத்தலால் சாதியொற்றுமையைத் தாபித்தற்குப் போதாது என விளங்குகின்றது.

தமிழரின் முன்னைய இருப்பிடம் மத்தியதரைக்கடலைச்சார்ந்த பிரதேசங்களே என்பதும், அவர்கள் மிகப்புராதனமான ஒருகாலத் தில் அங்கிருந்து கடல்மார்க்கமாகவோ கரைப்பாதையாகவோ வந்து பாதகண்டம் முழுதும் பரந்து குடியேறினர் என்பதும், அன்னோர் இந்தியாவிலிருந்து உயர்தர நாகரிகம் அடைந்து கொண்டபின்னர் மேற்கிலும் கிழக்கிலும் சென்று தமது நாகரிகத் தை நாட்டினர் என்பதும் இனிச் சிறிதுசிறிதாக விளக்கப்படும்.

# அநுதாபக்குறிப்பு

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிருவாகசபையங்கத்தினராயிருந்தவர்களான V. சுந்தரமையரவர்கள் B.A., B.L., நிகழும் சித்திரபாநு௵ தைமீ 4௳ (17-1-43) ஞாயிற்றுக்கிழமையன்றும், V. S. இராமஸ்வாமிசாஸ்திரியாரவர்கள் B.A., B.L., தைமீ 24௳ (6—2—43) சனிக்கிழமையன்றும் இம் மண்ணுலகவாழ்வை நீத்ததறிந்து மிகவும் வருந்துகிறோம்.

இவருள், சுந்தரமையரவர்கள் உயர்குடிப்பிறப்பும் ஒழுக்கமேம்பாடும் குணநலன்களும் வாய்ந்தவர்கள்; பல ஆண்டுகளாக இச்சங்கத்தின் கௌரவகாரியதரிசிகளுள் ஒருவராயிருந்து சங்ககாரியங்களைத் திறம்படநடத்திவந்தவர்கள்.

சாஸ்திரியார் குடிப்பிறப்பு முதலியவற்றுடன் ஆங்கிலம், ஆரியம், ஆந்திரம், வங்காளி, ஹிந்தி, தமிழ் முதலிய பலமொழித்தேர்ச்சியும் உடையவர். ஆரியத்திற் சீரிய கத்திய பத்தியங்களை இனிதியற்றும் ஆற்றலும் மிக்கவர்; அயன்மொழிகளிலுள்ள சிறந்த நூல்களை அவ்வந்நூற்பொருளமைதிகள் பிழையாதவாறு தமிழில் மொழிபெயர்ப்பதிலும் சதுரர். தக்கநூல்களைக் கேட்போர் நன்கு மனங்கொள்ளுமாறு விளக்கவும் அரியவிஷயங்களைச் சபையோர் மகிழுமாறு உபந்யஸிக்கவும் வல்லுநர். பல ஆண்டு மதுரையிலுள்ள இராமநாதமஹாவித்யாலயத்துப் போசிரியராயிருந்து பணியாற்றியவர்; இருபத்தைந்தாண்டுகளுக்கும்மேலாக இச்சங்கத்தின் கணக்குப்பரிசோதகராயிருந்தும் நம் செந்தமிழுக்கு அரிய பொருளுரைகளை வழங்கியும் அவை சிறக்க வுதவிவந்தவர்.

இவ்விருவரையும் பிரிந்து துயருறும் உறவினர்க்கும் நண்பினர்க்கும் நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பத்திராசிரியர்.

# மதிப்புரை

இலக்கியப்பூந்துணர் ( புத்தகம் I. II ):— இயற்றியவர் திரு. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. விலை:- முதற்புத்தகம் 13 அணா. இரண்டாம்புத்தகம் 15 அணா. கிடைக்குமிடம்.— ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடிப்ரெஸ், சென்னை, (பம்பாய், கல்கத்தா).

இவற்றுள், செய்யுட்பாடப் பகுதியில் (1) தோத்திரம், (2) நீதி (3) காவியம், (4) பலவகை என்ற தலைப்பின்கீழ் முற்கால தற்காலப் பெரியார் பாடிய தனிப்பாடல்களும் நீதிநூல்களும் காவியங்களும் ஆகியவற்றிலிருந்து ஏற்ற செய்யுட்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. வசனபாடப்பகுதியில் தக்க அறிஞர்களாற் பலவேறு பொருள்பற்றிய கட்டுரைகள் நன்கு வரையப்பட்டுள்ளன. கற்பார் இடர்ப்படாதுகற்குமாறு குறிப்புரையும் விடைபகர்ந்து தேருமாறு வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

செய்யுட்டிரட்டும் உரைநடைத்திரட்டுமாக அமைந்த இப் புத்தகங்கள், ஆங்கிலகலாசாலைகளில் நான்காவது ஐந்தாவது பாரங் களிற் பயிலும் மாணவருள் சாதி மத வேறுபாடின்றி எல்லார்க்கும் தமிழ்ப்பாடமாகுந் தகுதியுடையன. கற்பார்க்குத் தமிழிலக்கிய இலக்கணவுணர்வொடு பலகலைத்துறையறிவும், உலகியலறிவும் ஒழுக்கநலனும் இனிதுதவுவன.

---

1. திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் சரித்திரச்சுருக்கமும் உள்ளுறைப்பொருளும் 2. சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரச்சுருக்கமும் உள்ளுறைப்பொருளும்:—இவை, பழநிதேவஸ்தானம் வேதசிவாகமபாடசாலையாசிரியர் சிவத்திரு ஈசானசிவாசாரியரவர்களால் எழுதப்பெற்றுப் பழநி ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தான திருவாக அதிகாரி திரு ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை B.A., B.L. அவர்களால் அத்தேவஸ்தானவெளியீடாக அச்சிடப்பெற்றவை. இவற்றுள் மேற்கூறிய நாயன்மாரிருவர்சரிதமும் யாவரும் படித்துணருமாறு நன்கு சுருக்கி வரையப்பெற்றிருப்பதுடன், சைவசமயநூற்கருத்துக்களும் ஒழுக்கநெறிமரபுகளும் தெளிய விளக்கப்பட்டுள்ளன. இவற்றின்விலை தனித்தனி அணா ஒன்று. வேண்டுவோர் மேலே கண்ட தேவஸ்தான காரியாலயத்திற் பெறலாம்.

---

'சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரறி நறவின் எருமை யூரன்
தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநனென்று
எழுவர் நல்வல மடங்க வொருபகல்
முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்று களம் வேட்ட'னன் (அகம். 36)

என்ற செய்தியை நக்கீரர் அறிவுறுத்துப் புகழுகிறார். நெடுநல் வாடை என்னும் அழகிய செய்யுள் இவ்வாலங்கானத்துச் செரு வையே குறித்ததென நச்சினார்க்கினியர் கூறினர். இவன் 'முதுநீர் முன்றுறை முசிறியை' முற்றுகையிட்ட செய்தியொன்றும் அக நானூற்றுச்செய்யுளால் (57) விளங்குகிறது. இப்பேரரசன் பசும் பூட்பாண்டியன் (அகம். 253), பசும்பூட்செழியன் எனவும் வழங் கப்பட்டான். இது ஒரு புறநானூற்றுச் செய்யுளால் (76) புலனாகின் றது. கடற்கரையில் இவனுக்குரிய மருங்கூர்ப்பட்டினத்தின் அழ கையும், ஆவணத்தின் சிறப்பையும் பாராட்டிக்கூறுகிறார் (அகம். 227, நற்றிணை. 258, 358); இப்பட்டினம் தழும்பன் என்பவனது ஊணூருக்கு 'உம்பர்' உள்ளது (அகம். 227); கொங்கர்கள் இவனால் துரத்தியடிக்கப்பட்டார்கள்; அவ்வெற்றியால் பலநாடுகள் இவன் வசமாயின (அகம். 253). பெருங்குளம் ஒன்றை அமைத்துத் தனதுநாட்டுக் கழனிகள் பயிர்செழிக்கச்செய்தனன்; இக்குளம் வாணன் என்பவனது சிறுகுடி என்னும் ஊர்க்கருகில் இருந்தது (நற். 340). மோகூர்மன்னனும் (மதுரைக்காஞ்சி. 508) நெடுஞ் செழியனது வாய்மொழிகேட்பவனுமாகிய (மதுரைக். 772) பழை யன்மாறன் கூடற்போரிலே கிள்ளிவளவனைவென்று கோதைமார் பன் என்னும் சேரன் மகிழும்படி வளவனதுநாடுகள் பலவற்றைக் கவர்ந்து பாண்டிநாட்டைப் பெருகச்செய்தனன் (அகம். 346). கூடல்நகரின் நாளங்காடியிலே பலவகை நறும்பண்டங்களும் வைக் கப்பெற்றிருந்ததனாலே இனிய நறுமணம் கமழ்ந்துகொண்டிருந் தது (அகம் 93). இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனும்

நக்கீரர்காலத்தவனே. இவன் நெடுஞ்செழியனுக்கு எம்முறையி னன் என்பது விளங்கவில்லை; ஒருகால் மகனாயிருப்பினும் இருக்க லாம். இந் நன்மாறனை நக்கீரர் (புறம். 56) பூவைநிலைத் துறையில்,

'கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்'

எனத் தெய்வங்களோடு ஒப்பிட்டு,

'யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினி தொழுகுமதி ஓங்குவாண் மாற'

என வாழ்த்துகின்றார்.

சோணாட்டில் உறந்தைப்பிரதேசம் தித்தனுக்கு உரியதா யிருந்தது(புறம். 395). இவ்வுறந்தை நிதியாற் பெயர்சிறந்திருந் தது (அகம்.369). அங்கே அறங்கெழுநல்லவையொன் றிருந்தது (அகம். 93). இந்நகரின் கீழ்பாலுள்ள பிடவூரில் பெருஞ்சாத்தன் என்னும் வள்ளல் வாழ்ந்துவந்தனன் (புறம். 395). காவிரிம்பூம் பட்டினத்தில் பொலம்பூட்கிள்ளி அரசுபுரிந்துவந்தனன். இவன் கோசர்படையை அழித்து அவர்கள்நாட்டைக் கைப்பற்றினன் (அகம். 205). பழையன்மாறனால் இக்கிள்ளி தோல்வியுற்றான் (அகம். 346). இடையாறு என்னும் நகர் முற்காலத்தில் கரிகால் வளவனுக்கு உரிமையாயிருந்து நக்கீரர்காலத்தும் சிறப்புற்றிருந் தது (அகம். 141). காவிரிபாயும் கூற்றமொன்றில் எவ்வி அரசு புரிந்துவந்தான் (அகம்.126). இவன்சொல்லைக் கேளாது திதியனுக் குரிய காவன்மரமாகிய புன்னையைவிரும்பி அவனோடு அன்னி யென்பவன் பொருதழிந்தான் (அகம். 126).

சேரநாட்டிற் கோக்கோதைமார்பன் அரசுபுரிந்துவந்தனன் (அகம்.346). இவனுக்கு வானவரம்பன் என்றொரு பெயரும் வழங்

கியது (அகம். 389). இவனது தலைநகர் தண்ணான்பொருநையின் கரையிலுள்ள கருவூர் (அகம்-93). தொண்டியிலே குட்டுவன் அரசு புரிந்தான் (அகம். 290).

மூவேந்தரும் பாரியின் பறம்பை முற்றுகையிடக் கபிலர் தமது மதித்திறத்தால் தூரத்தேநின்று நெற்கதிர்கள் கொணர்வித்துப் பஞ்சத்தைநீக்கினார் என்ற பழஞ்செய்தியை நக்கீரர் வியந்து பாராட்டுகின்றனர் (அகம். 78).

தொண்டைநாட்டிற் பொலம்பூட்டிரையன் கடற்கரைப் பட்டினமாகிய பவத்திரியில் அரசாண்டுவந்தனன் (அகம். 340). வேம்பியென்னும் நகரில் முசுண்டையென்னும் குறுநிலத்தரசன் சிறந்துவிளங்கினான் (அகம். 249). அயிரியாற்றைத் தன்னகத்தே கொண்ட நாட்டிலே வடுகர்பெருமகனாகிய எருமையென்பவன் வாழ்ந்துவந்தனன் (அகம். 253). சிறுகுடி யென்னும் நகரிலே அருமன் என்ற ஒரு போர்வீரன் விளங்கினன் (நற். 367). கோடையென்னும் மலையிலே மழவர் என்ற ஓரினத்தவர் இருந்தனர். இவர்கள் மயிற்றூவியாற்செய்த மாலையை அணிந்துவந்தனர் (அகம். 249).

யவனர்கள் மதுவை இயற்றிப் பக்குவப்படுத்தித் தமது நாட்டிலிருந்துகொண்டுவந்து தமிழ்நாட்டு அரசர் முதலியோரை உண்பித்துக் களிக்கும்படிசெய்தனர் (புறம். 56).

இந்நக்கீரருக்குத் தமிழ்நாடு தம்மைப்போன்றார் பெறும் பரிசிலின்பொருட்டு உளதாகிய உலகமாகத் தோன்றிற்று. இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈதலே அரசன் மேற்கொள்ளவேண்டும் ஒழுக்கமென இவர் கருதினர் (புறம். 56). செல்வத்துப்பயன் ஈதலே (புறம்.189) என வற்புறுத்துகின்றார். இப்பரிசிலின்பொருட்டுச்சேர சோழ பாண்டிய நாடுகளிலும் குறுநிலமன்னர் நகர்களிலும் வள்ளல்கள் ஊர்களிலும் சுற்றித்திரிந்து பாடியிருக்கின்றார். தெய்வங்களைக்கூட மக்கட்பிறப்புவரை இழித்துக்கொணர்ந்து, தாம் பரிசிலின்பொருட்டுப் பாடுகின்ற அரசர்களை ஒப்பிடற்குரிய

பொருள்களாக்கிவிடுகின்றனர். மகளிர் பொற்கலத்தில் ஏந்திக் கொடுக்கும் மதுவுண்டு களித்தலையே சிறந்த வாழ்வென அரசர்க்கு அறிவுறுத்தி ஆசிகூறுகின்றார்.

இவ்வுலகத்திற்கும் ஆற்றுப்படையியற்றிய நக்கீரர் மனவுலகத்திற்கும் பெரிதும் வேறுபாடுண்டு. மறந்தும் பொருட்பரிசில் அவ்வுலகில் இல்லை. அரசர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள் யாரும் அங்கில்லை. முத்தியாகிய பரிசிற்கே தாம் முயன்று பிறரையும் அவ்வழிச் செலுத்துகின்றார். 'தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்பதே இவரது கொள்கை. கீழ்மக்களது அநாசாரமான வழிபாட்டினும் தெய்வங்கொள்கைகண்டு இன்புறுகிறார். யாண்டும் இறைவனுண்மையை உள்ளூற உணர்கின்றார்.

'காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
... ... ... ...
வேண்டினர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே' (முருகு. 223-249)

எனப் பறைகொட்டுகிறார். அவனது திருவிளையாடல்களைப் புராணவுலகிற் கண்டு களிக்கின்றார். இவர் முற்கூறிய நக்கீரரின் முற்றும் வேறானவர் என்பது சொல்லவும்வேண்டுமோ? தாம் வழிபடுதெய்வத்தோடு மக்கட்பிறப்பினனொருவனை இந்நக்கீரர் ஒப்புக்கூறுவரா என்பதையும், தெய்வபத்தியிற் சிறந்த இப்புலவர், 'மதுவைப் பொற்கலத்தேந்தி மகளிர் ஊட்ட மகிழ்ச்சியோடு இனிது ஒழுகுவாயாக' என ஓரரசனை வாழ்த்துவரா வென்பதையும் சிந்தித்தல் வேண்டும்.

தொகைநூற்புலவராகிய நக்கீரர் சிறந்த கவித்வம் படைத்தவர். அவரது நெடுநல்வாடை சங்கச்செய்யுட்களில் முன்னணியில் வைத்தற்குரிய தகுதிவாய்ந்தது. இவ்வரிய செய்யுளில்வரும் சில

செய்திகள் இவரது காலத்தை ஒருவாறு அறுதியிடுதற்கு உதவுகின்றன. மதுரை மாடமோங்கிய மல்லன்மூதூராக விளங்குகின்றது. அதன் தெருக்கள் ஆறுகிடந்தனபோன்றுள்ளன. அங்கே மிலேச்சர்கள் மாலைப்பொழுதில் தேறலையுண்டு, மழைதூறிக்கொண்டிருக்கவும் அதனைப் பொருட்படுத்தாது, தெருக்களில் திரிகின்றார்கள். அரசனது அரண்மனை மிக்க அழகுவாய்ந்துள்ளது. அதனை மனைநூல்விதிப்படி ஒரு நன்னாளில் இயற்றத்தொடங்கினர்.

'விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறஞ் சாரா அரைநா ளமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்'தனர். (73-8)

வாயில்நிலையின் உத்தரக் கற்கவி நடுவே திருவும் அதன் இருபுறத்தும் இரண்டு செங்கழுநீர்ப்பூவும் இரண்டு பிடியுமாக வகுக்கப்பட்டுள்ளது. இவ்வுத்தரக்கற்கவி,

'நாளொடு பெயரிய கோளமை விழுமரத்து' (82)

என்னப்படுகின்றது. 'உத்தரம் என்னும் நாளின் பெயர்பெற்ற செருகுதல் பொருந்தின பெரியமரம்' என்பது பொருள். அரண்மனையிற் கர்ப்பக்கிருகம் ஒன்று மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. இம்மனைப்பகுதி,

'கருவொடு பெயரிய காண்பி னல்லில்' (114)

என்று கூறப்படுகிறது. அந்தப்புரத்திலே அரசியிருக்கும் கட்டிலின் மேற்கட்டியில்,

'புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி, (159—163)

எழுதப்பட்டுள்ளது.

மேற்காட்டிய அடிகளிலே மனையமைப்பிற்குரிய வடமொழிப் பெயர்க்குறிப்புக்கள் வந்துள்ளன. மேஷராசியிலிருந்து தொடங்கிப் பன்னிருராசிகளிலும் சூரியன் செல்கின்றமை குறிக்கப்பட்டிருக்கிறது. உரோகிணிநக்ஷத்திரமும் கூறப்பட்டுள்ளது. கிரேக்கர்களிடமிருந்து ராசியைப்பற்றிய அறிவு சுமார் கி. பி. 200-ல் தமிழ்நாட்டிற் புகுந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதற்கேற்ப, யவனரும் நக்கீரரால் குறிப்பிடப்படுகின்றனர். எனவே சுமார் கி. பி. 250-ல் நக்கீரரால் நெடுநல்வாடை இயற்றப்பட்டிருக்கலாம். கபிலர், பாரி, கரிகாலன் முதலியோர்களெல்லாம் இந்நக்கீரருக்கு ஒருநூற்றாண்டிற்கு முற்பட்டவராகலாம். இவர் மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனாராகவிருக்கலாம். சங்க காலப்புலவர் இவரேயாதல்வேண்டும்.

முருகாற்றுப்படை இயற்றப்பெற்றகாலத்தில் பௌராணிகச் செய்திகள் தமிழ்நாட்டிற் பரவிவிட்டன. சங்ககாலத் தமிழ் வழக்காறுகளும் நன்குணரப்படவில்லை யென்பதும் மேலே காட்டப்பட்டது. ஆதலால், சங்கப்புலவராகிய நக்கீரருக்குச் சற்றேறத்தாழ இருநூறாண்டுகளின்பின் அவர் பெயர்கொண்ட பிறரொருவரால், முருகாற்றுப்படை இயற்றப்பட்டதாகலாம். எனவே உத்தேசம் கி. பி. 450-ல் முருகு-நக்கீரர் வாழ்ந்தவரெனக் கொள்ளலாம். முருகாற்றுப்படை 11-ஆம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளதும் இப்பிற்காலத்தையே ஆதரிப்பதாகலாம்.

பத்துப்பாட்டு சங்கநூலாயிற்றே! அதன்கண் உள்ள ஒருநூல் சங்ககாலத்திற்குப்பின் தோன்றியதெனக்கூறல் அமையுமோ? என்ற கேள்வி இயற்கையாக எழலாம். ஆனால், சில குறிப்புக்கள் ஞாபகத்தில் வைக்கத்தகுந்தன. தொகைநூல்களிற் பெரும்பாலனவற்றைத் தொகுத்தாரும், தொகுப்பித்தாரும் இவரென்று அவ்வத்தொகுதியின் இறுதியிற் காணப்படுகின்றது. எஞ்சியுள்ளன முற்றும் அகப்படவில்லையாதலால் அவைபற்றி இவ்விவரங்கள் அறியக்கூடவில்லை. பத்துப்பாட்டு அங்ஙனமன்று. முற்றுங் கிடைத்துவிட்டது; எனினும் இவ்விவரங்கள் காணப்படவில்லை.

இதனால், தொகைநூல்களோடொப்ப அவை தொகுக்கப்பெற்ற காலத்தில் பத்துப்பாட்டுத் தொகுக்கப்பெறவில்லையென்பது தெளிவு. 'பத்துப்பாட்டு' என்ற பெயரும் இத்துணிபினையே ஆதரிக்கின்றது. தொகைநூல்களுக்குக் கடவுள்வாழ்த்துச்செய்யுள் அமைந்துள்ளதைப்போல முருகாற்றுப்படை முதலாவது வைக்கப்பெற்றிருப்பதை நோக்கினால், அவற்றைப்பின்பற்றி இந்நூல் முறைபடக் கோக்கப்பட்டதாதல்வேண்டும். பத்துப்பாட்டிற் செய்யுள் ஒவ்வொன்றையும் அதனதன் தனிப்பெயர்கொண்டே இளம்பூரணர் முதலியோர் எடுத்தாண்டுள்ளார்கள். களவியலுரையில் கடைச்சங்கவரலாறு கூறுமிடத்துப் பத்துப்பாட்டு என்பது குறிக்கப்படவில்லை. மலைபடுகடாத்தின் உரையில் (அடி-145) 'சங்கத்தார் நீக்காது கோத்ததற்குக்காரணம்' என்று பொதுப்பட எழுதிச்செல்வது கோத்தார் இவரெனக் கூறவியலாமையையே புலப்படுத்துகிறது. எனவே சௌகரியங்கருதி ஒருமுறையில் எழுதிக்கோத்த நீண்ட பாடல்களைப் பிற்காலத்தார் 'பத்துப்பாட்டு' என வழங்கலாயினர் என்றலே அமைவுடைத்தெனத் தோன்றுகிறது. இவ்வழக்கு கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்குமுன்னரே நிலைத்துவிட்டதென்பது 'மயிலைநாதர்' 'பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் இவ்விலக்கியங்களுள்ளும்' (நன்-387 உரை) எனக்கூறுவதால் விளங்கும். 'பாட்டு' எனக் குறிப்பிடும் வழக்காறும் நாளடைவில் உளதாயிற்றென்பது 'பாட்டினுந் தொகையினும் வருமாறு கண்டுகொள்க' எனப் பேராசிரியர் (தொல். செய். 50) கூறுவதால் அறியலாகும்.

மேலெழுதியவற்றாற் பெற்ற முடிபுகள் கீழேதொகுத்துக் காட்டப்பட்டுள்ளன:

| | | காலம் | நூல்கள் | சமயம் |
|---|---|---|---|---|
| 1. | சங்க-நக்கீரர் | கி. பி. 250 | நெடுநல்வாடை<br>தொகைநூற்செய்யுட்கள் | ? |
| 2. | முருகு-நக்கீரர் | கி. பி. 450 | முருகாற்றுப்படை | சைவம் |
| 3. | இலக்கண-நக்கீரர் | கி. பி. 650 | அடிநூல், களவியலுரை<br>நாலடி நானூறு | சமணம் |
| 4. | நக்கீரதேவநாயனர் | கி. பி. 850 | 11-ஆம் திருமுறைப் பிரபந்தங்கள் | சைவம் |

முருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் உரையைத்தவிரப் பல உரைகள் எழுதப்பட்டுள்ளன. பண்டையுரைகாரர்கள்மீது சுமத்தப்பட்ட உரைகளும் அச்சிலிருக்கின்றன. உதாரணமாக, தி. சண்முகம்பிள்ளையவர்களால் பார்த்திப௵ மேடரவியில், சென்னை ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில் 'பரிமேலழகருரை'யென ஒருரை பதிப்பிக்கப்பட்டது. இதனையே மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பத்துப்பாட்டின் 3-ஆம் பதிப்பில் 'வேறுரை' என அடிக்குறிப்பிற் காட்டியிருக்கின்றார்கள். பரிமேலழகர் இவ்வுரையை இயற்றவில்லையென்னுங் கருத்தோடுதான் இதனை 'வேறுரை' என ஐயரவர்கள் குறித்துள்ளாரென நினைக்கிறேன். இதனைப்போன்றே இப்போது வெளியிடப்பெறுவது 'உரையாசிரியருரை' என ஏட்டுப்பிரதியில் எழுதப்பெற்றுளது. உரையாசிரியர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் இளம்பூரணவடிகள் இவ்வுரையை இயற்றியவரல்லர் என்பது உரையின்நடையை நோக்கிய அளவிற் புலனும். ஆனால் ஏட்டுப்பிரதி 994-ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 30-ஆம் தேதி எழுதப்பெற்றது. எனவே இற்றைக்கு 124 வருஷங்களுக்குமுன் பிரதிசெய்ததாகும். எப்பொழுது இவ்வுரை வகுக்கப்பெற்றது என்பது அறியக்கூடவில்லை. இவ்வுரையும் நச்சினார்க்கினியர் உரையும் பெரிதும் ஒத்துச்செல்கின்றன. 'வசிந்துவாங்கு நிமிர்தோள்' (106-ஆம் அடி) என்றதன் உரையில் 'வளையவேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிடம் நிமிரும்தோளென்றும் உரைப்பர்' என நச்சினார்க்கினியர் தமக்கு முற்பட்ட உரைகாரர் ஒருவரைக் குறிப்பிடுகின்றார். இப்போது வெளியிடும் இவ்வுரையில் இப்பொருளே காணப்படுகிறபடியால், இவ்வுரை நச்சினார்க்கினியர்க்கு முந்தியது எனக் கொள்ளுதற்கு இடமுமையும். உத்தேசமாக கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் இவ்வுரை எழுதப்பெற்றதாகலாம்.

இஃது ஒரு சிறந்த பழையவுரையாகும். யாவரும் அறியக்கூடியபடி மிகவும் எளிமையானநடையில் எழுதப்பெற்றிருக்கிறது. மாட்டு முதலிய இலக்கணத்தால் அடிகளைச் சிதைத்து அலைத்துப் பொருள்பண்ணுதபடி சொற்கிடக்கைமுறையிலேயே பெரும்பாலும் பொருள்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆற்றுப்படையைக் கற்

| | | | |
|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | [illegible] |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் ... ... ... | | |
| 51. | *மதங்கசூளாமணி ... ... ... | | |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | [illegible] |
| | ௸ (ஆங்கிலம்) ... ... ... | 0 | [illegible] |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... | 1 | [illegible] |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 1[illegible] |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | [illegible] |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | [illegible] |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | F |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை நூதன பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாட்டினருக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும் பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி- இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.